# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

சுட்டெண்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழ்நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள்

அ) 217 ஆ) 30 இ) 247 ஈ) 216

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. கிறங்கல் என்பது

அ) தனை மறத்தல் ஆ) தனை வெறுத்தல்

இ) தனைத் தாங்குதல் ஈ) தனை ஒதுக்குதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. புத்தரின் படுகொலை என்ற கவிதையை எழுதிய கவிஞர்

அ) சாலை இளந்திரையன் ஆ) அம்பி

இ) எம்.ஏ.நுஃமான் ஈ) உதயை வீரையன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. வறுமையிற் செம்மை என்பதைக் குறிக்கும் பழமொழி

அ) குடிப்பது கூழ் கொப்புளிப்பது பன்னீர்.

ஆ) இரக்கப் போனாலும் சிறக்கப்போ.

இ) ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகின்றது.

ஈ) சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. இராவணனின் தந்தை

அ) குகன் ஆ) வச்சிரவாவு இ) வீடணன் ஈ) கும்பகண்ணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. 'ஓடிய' என்பது

அ) வினைமுற்று ஆ) பெயரெச்சம் இ) வினையடி ஈ)வினையெச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. தொல்பழங்காலத்தில் தமிழகத்தின் ஆட்சித் தலைநகராக விளங்கியது

ஆ) இமயம்　　ஆ) இலங்கை　　இ) கடாரம்　　ஈ) கம்போடியா

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

8. மாற்றானை ஊர்விட்டு ஓட்டும் போரில் வீரச்சாவு அடைந்தவருக்கு நாட்டப்படும் கல்

அ) நடுகல்　　ஆ) சாமிக்கல்　　இ) செங்கல்　　ஈ) சிற்பக்கல்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

9. ஆகிய, ஆன என்ற உருபுகள் தொக்கி நிற்பது

அ) வினைத்தொகையில்　　ஆ) உம்மைத்தொகையில்

இ) பண்புத்தொகையில்　　ஈ) வேற்றுமைத்தொகையில்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

10. யாழ் நூலகத்திற்கான புதிய கட்டிடம் கட்டுவதற்குரிய குழுவின் தலைவராக இருந்தவர்

அ) வண. தந்தை லோங் அடிகளார்　　ஆ) வண. தந்தை தாவீது அடிகளார்

இ) வண. தந்தை இராசப்பு அடிகளார்　　ஈ) வண. தந்தை தனிநாயகம் அடிகளார்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

11. மச்சானே மாம்பழமே மாமி பெத்த பாலகனே என்ற நாட்டார் பாடல்

அ) தொழிற்பாடல்　　ஆ) காதற்பாடல்

இ) தாலாட்டுப்பாடல்　　ஈ) ஏர்ப்பாடல்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

12. அஞ்சல் எழுதும்போது அரசியலாளரை ______________ என விளிப்பர்.

அ) மாண்புமிகு　　ஆ) மேதகு　　இ) அன்புள்ள　　ஈ) அன்புடையீர்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

13. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றாவினை

அ) ஓடு ஆ) நட இ) படி ஈ) இரு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. பாண்டிய அரசியின் சிலம்பைக் களவாடியவன்

அ) பொற்கொல்லன் ஆ) கோவலன் இ) மாடலன் ஈ) மாசாத்துவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. இலங்கையில் தன் முடியையும் செல்வங்களையும் அடைக்கலமாக வைத்திருந்த மன்னன்

அ) சோழமன்னன் ஆ) சேரமன்னன்

இ) பாண்டியமன்னன் ஈ) பல்லவமன்னன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. பிறவினைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) கட்டினான் ஆ) எடுப்பித்தான் இ) படித்தான் ஈ) செய்தான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. 20ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒப்புயர்வற்ற இலக்கியம்

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) இராவணகாவியம் ஈ) திருக்குறள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. சிலப்பதிகாரக்கதையில் மாதவி அரங்கேறிய நகர்

அ) வஞ்சி ஆ) மதுரை இ) புகார் ஈ) பேரூர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. **மானிடா சொல்** என்ற கவிதையின் ஆசிரியர்

அ) சாலை இளந்திரையன் ஆ) அம்பி

இ) உதயைவீரயன் ஈ) இரவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. முழு இலங்கையினையும் சோழரது ஆட்சியின் கீழ் கொண்டுவந்த மன்னன்

அ) இராசேந்திரசோழன் ஆ) கரிகாற்சோழன்

இ) குலோத்துங்கசோழன் ஈ) இராசராசசோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. ஏழு நரம்புகள் உள்ள வீணையின் இசை

அ) பண் ஆ) கைக்கிளை இ) திறம் ஈ) தாரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. நிலையற்றது என்பதைக் குறிக்கும் உவமைத்தொடர்

அ) கிணற்றுத்தவளைபோல் ஆ) சிலையில்எழுத்துப்போல்

இ) நீர்மேல்எழுத்துப்போல் ஈ) அத்திபூத்தாற்போல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. வேற்றுமை ஏற்பது

அ) வினைச்சொல் ஆ) உரிச்சொல் இ) பெயர்ச்சொல் ஈ) இடைச்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. "ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்" என்று வஞ்சினம் உரைத்தவர்

அ) மாதவி ஆ) கண்ணகி இ) கோவலன் ஈ) மன்னன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. வா தோழியே இனியும் இப்படி இருக்க முடியாது என்ற வரிகள் இடம் பெற்ற கவிதைத் தலைப்பு

அ) இனியும் ஆ) ஓடிடும் தமிழா இ) மானிடா சொல் ஈ) ஓங்குபுகழ்கற்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. மக்கள் தேர்த்திருவிழாவுக்குத் __________ ச் செல்வர்.

அ) திரள்திரளாக ஆ) பட்டம் பதவியுமாக

இ) சாரிசாரியாக ஈ) தன்னந்தனியே

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளின் எண்ணிக்கை

அ) 12 ஆ) 18 இ) 20 ஈ) 100

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. சிலப்பதிகார வாழ்த்துப்பாவில் இளங்கோ அடிகள் வாழ்த்தியது

அ) செயற்கையை ஆ) மன்னனை இ) கடவுளை ஈ) இயற்கையை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பின்வருவனவற்றுள் இடைச்சொல்

அ) சால ஆ) தோறும் இ) படி ஈ) உறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. யாழ்ப்பாண நூலகம் தீயிடப்பட்ட ஆண்டு

அ) 1954 ஆ) 1964 இ) 1989 ஈ) 1981

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30


**2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

1. சிலப்பதிகாரக்கதை தொடங்கிய நாடு ஏது?

______________________________________________

______________________________________________

2. தரப்பட்டுள்ள தமிழீழ வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள இடங்கள் எவை?




அ) ______________________

ஆ) ______________________

இ) ______________________

ஈ) ______________________

3. செந்தாமரை விரியத் தேமாங்கொழுந் தொழுக...... வந்தது எது? இக்காலத்தில் நடைபெறும் விழா எது?

______________________________________________

______________________________________________

4. யாழ் நூலகம் எரிந்த செய்தியைக் கேட்டு உயிர் நீத்தவர் யார்?

______________________________________________

______________________________________________

5. இராவணகாவியத்தை எழுதிய ஆசிரியர் யார்? இவர் எந்நாட்டைச் சேர்ந்தவர்?

______________________________________________

______________________________________________

6. இலங்கையில் பண்டைய தமிழ்ச் சிற்றரசுகள் இருந்த இடங்கள் இரண்டைத் தருக.

______________________________________________

______________________________________________

7. வாய்மொழி இலக்கியம் என்று குறிப்பிடப்படுவது எது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

**3) பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

- தாயுமானவரே தன்னிகரில்லாதவரே
  தணியாத தாகத்துடன் தவிக்கின்றோம் நாங்கள்

- இனிய எம் மொழியே எங்கும் பரந்துள்ளது - இதை
  எண்ணிப்பார்க்கையில் எம் உள்ளம் மகிழுதே

- அறிவியலே உன் வளர்ச்சி அதிகமானதே
  அதனாலே உயிர்கள் பலவும் பலியாகுதே

புள்ளிகள் 10

## 4) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழரின் மரபுவழிச்செல்வங்களில் மிகப்பழமையானது இசைச்செல்வமாகும். பழந்தமிழர் இசையெனக் குறிப்பிடும்போது ஐரோப்பியர் ஆட்சிக்கு முற்பட்ட காலத் தமிழ்மொழியான இசைநடைச் சிறப்புகள் பெற்ற மாற்றங்கள் இங்கு குறிப்பிடத்தக்கது. கழகத்தமிழானது இயல் இசை நாடகம் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழை முத்தமிழ் என்று சிறப்பித்துக் கூறுவர். இதில் இசை என்பது தமிழ் இசையாகும். பழந் தமிழ் மக்கள் வேறு இனமக்களுடன் தொடர்பு கொள்ள முன்னரே இசையும் அதோடு இணைந்த கூத்தும் உருவாகி வளரத் தொடங்கின. இசை, கூத்து ஆகிய கலை நுட்பங்களை விளக்கும் இலக்கணத்தமிழ்நூல்கள் எழுந்தன. இந்நூல்கள் எழுதப்பட்ட காலம் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமாகும். எனவே தமிழிசையும் கூத்தும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செவ்விய கலைவடிவங்களாக விளங்கின என உறுதியாகக் கூறலாம்.

கி.பி16ஆம் நூற்றாண்டளவில் சிறப்புப் பெற்ற கருநாடக இசைக்கும் தமிழ் இசைக்கும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இக்கருநாடக இசையானது தமிழிசையின் மறுவடிவமே என இசை ஆய்வாளர்கள் உறுதியாகக் கூறுகின்றனர். பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களிலும் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்திலும் தமிழிசைபற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. கி.பி6ஆம் நூற்றாண்டில் தொடங்கி 10ஆம் நூற்றாண்டுவரை உள்ள சைவசமய மறுமலர்ச்சிக்காலத்தில் தோன்றிய திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், சுந்தரமூர்த்திநாயனார், திருஞானசம்பந்தர் ஆகிய நாயன்மார்கள் தமிழிசை வளர்ச்சிக்குப் புத்துயிர் அளித்தனர். தமிழிசைக்கு இலக்கணம் வகுத்த முதல் நூல் அகத்தியம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் அந்த அரிய நூல் இப்போது இல்லை. இந்நூல் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அகத்தியரால் எழுதப்பட்டது என தமிழாய்வாளர்கள் கூறுகின்றனர்.

1. சைவ சமய மறுமலர்ச்சிக்காலம் எது எனக் கூறப்படுகின்றது?

2. அகத்தியம் என்ற நூல் யாரால் எழுதப்பட்டது?

3. தமிழிசைக்குப் புத்துயிர் அளித்தவர்கள் யார்?

4. கருநாடக இசை சிறப்புப் பெற்ற நூற்றாண்டு எது?

5. தமிழரின் இசையும் கூத்தும் எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கூறப்படுகின்றது?

புள்ளிகள் 10

## 5) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. அ) வேற்றுமைகள் எத்தனை?

_______________________________________________

ஆ) உருபு ஏற்கும் வேற்றுமைகள் எத்தனை?

_______________________________________________

இ) உருபு ஏற்காத வேற்றுமைகளில் ஒன்றிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

2. பின்வரும் அணிகளுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

அ) உவமையணி :- _______________________________

ஆ) உருவக அணி :- _______________________________

இ) தற்குறிப்பேற்ற அணி :- __________________________

3. வேற்றுமைத் தொகைகள் எத்தனை? அவற்றுள் ஏதாவது இரண்டுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

_______________________________________________

4. கீழேயுள்ள மரபுத்தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

அ) வெட்டவெளி :- _______________________________

ஆ) அத்திபூத்தாற்போல் :- ___________________________

5. பின்வரும் ஆகுபெயர்களுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

அ) சினையாகுபெயர் :- ____________________________

ஆ) குணவாகுபெயர் :- ____________________________

இ) தொழிலாகுபெயர் :- ____________________________

**புள்ளிகள் 15**

## 6) பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

ஒரு மொழியை வாசிக்கவும் எழுதவும் பேசவும் தெரிந்திருந்தால் மட்டுமே அம்மொழியை நன்கு தெரிந்தவர்களாவோம். வாசிப்பு என்பது மொழியறிவின் ஒரு முதன்மையான பகுதியாகும். ஆனால் இன்று இளையோரிடையே வாசிக்கும் பழக்கம் குறைந்துகொண்டே வருகின்றது. இதற்குக் காரணம் அவர்களிடையே ஊடுருவி இருக்கும் அறிவியற் கருவிகளான இணையம், தொலைக்காட்சி, முகநூல், அதிதொழிநுட்பம் வாய்ந்த தொலைபேசிகள் போன்றனவாகும். இன்றைய இளையோர் தங்கள் நேரங்களை இவ்வறிவியற் கருவிகளுடனேதான் கழிக்கின்றனர். தொலைக்காட்சியில் விளையாடுதல், படம்பார்த்தல், தொலைபேசியில் பாட்டுக்கேட்டல் போன்ற செயல்களிலேதான் கூடுதலான நேரம் ஈடுபடுகின்றனர். வாசித்தல் என்பதே இளையோருக்குப் பிடிக்காத ஒன்றாகி விட்டது. தேடல்கள் இல்லாமல் போகின்றது. ஒரு குறுகிய வட்டத்துக்குள்ளேதான் அவர்கள் தங்கள் வாணாட்களைக் கழிக்கின்றனர். வாசிப்பதால் மாந்தன் முழுமையடைகின்றான் என்ற பொன்மொழிக்கிணங்க இளையோர் வாசிக்கும் பழக்கத்தில் ஈடுபடவேண்டும். தங்கள் அறிவை வளப்படுத்த வேண்டும்.

சுருக்கத்திற்கான குறிப்புகள் :

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- இராவணகாவியம்
  (இராவணனின் சிறப்பும் ஆட்சிச் சிறப்பும்)

- உலக வெப்பமயமாதலும் அதனால் ஏற்படும் விளைவுகளும் அதைத் தடுக்கும் வழிகளும்

- துரித உணவுகளும் (fast-food) அதானல் ஏற்படும் தீயவிளைவுகளும்

புள்ளிகள் 20